DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calendar Case No | .. | .. | **CC 952/2025** | | |
| Deposition of Witness for | | | PW 1 (LW 1) | | |
| | | | Prosecution Side Witness | | |
| | | | Court | | |
| Name | : | **திரு. சிவா** | Taluk | : | ஆத்தூர் |
| Father/Husband Name | : | **த.பெ.திரு.** ராஜேந்திரன் | Calling | : | தலைமைக்காவலர் |
| Village | : | ஆத்தூர் நகர காவல் நிலையம் | Age | | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **09.07.2026. துவக்க நேரம் 05.02**

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் ஆத்தூர் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.07.2025அன்று காலை 08.15 மணியளவில் நானும், என்னுடன் தலைமைக்காவலர் திரு.வெங்கடேஷ் என்பவரும் காவல் உதவி ஆய்வாளர் திரு.சிவசக்தி அவர்கள் தலைமையில், மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஆத்தூர் நகர காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட ஆத்தூர் ரயிலடி தெரு அருகே கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் துறையன் த.பெ பாபு என்று கூறினார். பின்னர் எதிரி அவரிடமிருந்த சுமார் 180 மிலி அளவுள்ள Express BRANDY – 04 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி துறையன் என்பவரை, காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே கைது செய்தார்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 180 மிலி அளவுள்ள Express BRANDY – 04 பாட்டில்களைபாட்டில்களை அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில், காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள எனது 1–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்தை சம்பவயிடத்திலேயே யாருக்கும் பயன்படா வண்ணம் காவல் உதவி ஆய்வாளர், எங்கள் முன்னிலையில் கீழே கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தார். அழித்தல் மகஜரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையது தான். (**அழித்தல் மகஜரில் உள்ள எனது 1–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிறகு எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய, காவல் ஆய்வாளருக்கு நானும் உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர், என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1) நான் சொல்லும் சம்பவயிடமானது மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான் . நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றோமா என்றால் தனிதனி வாகனங்களில் சென்றோம்.

தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. என் முன்பாக சம்பவயிடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜரோ, மாதிரி வரைபடத்தையோ காவல் உதவி ஆய்வாளர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் பாட்டில்களை எங்கு அழித்தோம் என்றால் சம்பவயிடத்தில்தான் அழித்தோம். பாட்டில்கள் எதில் எதிரி வைத்திருந்தார் என்றால் பையில் வைத்திருந்தார். பையை கைப்பற்றுதல் மகஜரில் சேர்த்தேனா என்றால் இல்லை.கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜரும் கணிணியால் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்யப்பட்டது.

2) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பாட்டில்களையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்காக, காவல் உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரியின் மீது போடப்பட்ட பொய் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**முடிவு நேரம் 05.05**

| |
|---|
| Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct |
| N MOHANASUNDARAM Digitally signed by N MOHANASUNDARAM Date: 2026.07.09 17:50:11 +0530<br>Judicial Magistrate No.1(FAC)<br>Attur. |

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calendar Case No | . . | **CC 952/2025** | | | |
| Deposition of Witness for | | PW 2 (LW3) | | | |
| | | Prosecution Side Witness | | | |
| | | Court | | | |
| Name | : | **திரு. சிவசக்தி** | Taluk | : | ஆத்தூர் |
| Father/Husband Name | : | **த.பெ.திரு.தர்மலிங்கம்** | Calling | : | காவல் உதவி ஆய்வாளர் |
| Village | : | ஆத்தூர் நகர காவல் நிலையம் | Age | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **09.07.2026. துவக்க நேரம் 05.05**

**எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் ஆத்தூர் நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.07.2025அன்று காலை 08.15 மணியளவில் நானும், எனது தலைமையில் என்னுடன் தலைமைக் காவலர் திரு.சிவா மற்றும் முதல்நிலைக்காவலர் திரு.வெங்கடேஷ் ஆகியோர்களுடன் மதுவிலக்கு வேட்டை சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஆத்தூர் நகர காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட ரயிலடி தெரு அருகே கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு நபர் எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் துறையன் த.பெ பாபு என்று கூறினார். பின்னர் எதிரி அவரிடமிருந்த செய்த சுமார் 180 மிலி அளவுள்ள Express BRANDY – 04 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி துறையன் என்பவரை

அன்றைய தினமே கைது செய்தேன்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 180 மிலி அளவுள்ள Express BRANDY – 04 பாட்டில்களை அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் என்னுடன் வந்த போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். (**கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்பு கைப்பற்றிய வழக்கு சொத்தை யாருக்கும் பயன்படா வண்ணம் மேற்படி போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்திலேயே கீழே கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்து, சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன். (**அழித்தல் மகஜர் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

5) பிறகு எதிரியை நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது நிலைய குற்ற எண்.296/2025 சட்டப்பிரிவு 4(1)(C) of TNP (Amendment) Act 2024–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மையென தெரியவந்ததால் எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பிறகு வழக்கு விசாரணையை முடித்து சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1)சம்பவயிடத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றேனா என்றால் சரிதான். தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடம் மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான். சம்பவம் இடம் தொடர்பாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். அழித்தல் மகஜர் தயாரிப்பதற்கு எனக்கு அதிகாரம் உள்ளதா என்றால் இல்லை, வாய்மொழி உத்தரவு. வழக்கு சொத்துக்களை எதிரி எதில் வைத்திருந்தார் என்று வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேனா என்றால் இல்லை. எதிரியிடம் கைப்பற்றியதாக சொல்லும் சொத்துக்களை கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில்

கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

2) கைப்பற்றியதாக சொல்லப்படும் பாட்டில்களை, அளந்து பார்த்தோமா என்றால் இல்லை, தோராயமாக கூறியுள்ளோம். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் கணிணியால் தயாரிக்கப்பட்டது என்றாலும் , காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும் சரிதான்.

3) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதியப்பட்டுள்ளது என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றிருந்தால் நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பேன், தனி நபர் சாட்சிகளை விசாரித்திருப்பேன், சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்து எதிரி மீது வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**முடிவு நேரம் 05.10**

| |
|---|
| Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct |
| N MOHANASUNDARAM Digitally signed by N MOHANASUNDARAM Date: 2026.07.09 17:50:40 +0530<br>Judicial Magistrate No.1(FAC), Attur. |